**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 308/2013** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | செந்தில்குமார் | **வயது** | : | 47 |
| **த.பெ** | : | தங்கவேல் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | மங்களாபுரம் | **தொழில்** | : | தலைமை காவலர், வந்தவாசி |

**26.03.2026 – வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 10 ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்து விவரங்களும் உண்மை.

**கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.**

1)09.08.1962 தேதியிட்ட கிரையபத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2)வழக்கு சொத்திற்குண்டான என் தாத்தா நாராயணசாமி பெயரிலுள்ள வாய்தா ரசீதுகள் அசல் 6 எண்ணிக்கை **வா.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3)வழக்கு சொத்திற்குண்டான தீர்வை ரசீதுகள் 4 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4)இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 371/2012 ல் பிறப்பிக்கப்பட்ட 18.01.2013 தேதியிட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5)20.09.2013 தேதியிட்ட வாதிகளுக்கு போளூர் தாசில்தார் அனுப்பிய அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6)10.10.2013 தேதியிட்ட போளூர் தாசில்தார் அவர்களின் பொது அறிவிப்பு நகல் **வா.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7)17.10.2013 தேதியிட்ட போளூர் தாசில்தார் அவர்களுக்கு அனுப்பபட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது **வா.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8)படவேடு கிராமம் வாதிகள் பேரில் தாவா சொத்துகளுக்கு உண்டான பட்டா எண் 136 கணினி பட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9)வழக்கு சொத்திற்குண்டான பட்டா புத்தகம் அசல் **வா.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10)25.09.1990 தேதியிட்ட வழக்கு சொத்திற்குண்டான பாகபிரிவினை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11)அசல் வழக்கு எண் 371/2012 ல் இந்நீதிமன்றத்தால் 25.01.2017 ல் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12)அசல் வழக்கு எண் 371/2012 இபி 64/2018 ல் இந்த நீதிமன்றத்தில் வாதிகள் சுவாதீனம் எடுத்ததற்குண்டான சுவாதீன ரசீது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து இந்த வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட அனைத்து ஆவணங்களும் எதிர்தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.04.02 12:12:42 +0530

District Munsif,
Polur.